**மே – 12**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதலமைச்சர், சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் S. சாதிக்கிற்கு கல்விக்கோ விருதை வழங்கினார்.
- லியோ XIV என்ற பெயரில் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள போப்பாண்டவரான இராபர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட், 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பொள்ளாச்சியில் உள்ள செண்பகம் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிக்கு வருகை தந்திருந்தார்.
- தமிழக மாநில அரசினால் திருநெல்வேலியில் நிறுவப்படவுள்ள ஒரு பிரம்மாண்டமான நூலகத்திற்கு இந்திய முஸ்லிம் லீக் (IUML) ஒன்றியத்தின் தலைவர் காயித்-இ-மில்லத் பெயர் சூட்டப்படும் என்று தமிழக முதலமைச்சர் அறிவித்துள்ளார்.
- மேம்படுத்தப் பட்ட ஆயுதங்கள் மற்றும் உபகரண இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஒரு பிரிவான திருச்சியில் உள்ள ஆயுதத் தொழிற்சாலையானது, 92 டிரைகா (திருச்சி கார்பைன்) துப்பாக்கிகளின் முதல் தொகுப்பை கேரள காவல்துறையிடம் ஒப்படைத்து உள்ளது.
- தமிழக அரசானது, பொது சொத்துக்களைக் கட்டமைப்பதில் மக்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதை முக்கிய பெரும் நோக்கமாகக் கொண்ட நமக்கு நாமே திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 150 கோடி ரூபாய்க்கு நிர்வாக ரீதியான ஒப்புதலை அளித்து உள்ளது.
- இஸ்லாமிய இலக்கியச் சங்கம் (ILS) ஆனது, திருச்சியில் மூன்று நாட்கள் அளவிலான மாநாட்டினை ஏற்பாடு செய்து அதன் பொன் விழாவைக் கொண்டாடியது.
- இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் (ECB) ஆனது பெண்கள் மற்றும் சிறுமிகள் போட்டிகளில் திருநர்கள் பங்கேற்பதற்கான தடையை உடனடியாக அங்கு நடைமுறைக்கு வரும் வகையில் அறிவித்துள்ளது.
- சத்தீஸ்கர்-தெலுங்கானா எல்லைகளில் மிஷன் சங்கல்ப் எனப்படும் ஒரு மாபெரும் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையானது சமீபத்தில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனம் உருவாக்கிய துருவ் எனப் படும் மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டரின் (ALH) இராணுவ மற்றும் விமானப்படை பயன்பாட்டு வடிவங்களை நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கு என்று அதிகாரப் பூர்வமாக அனுமதிக்கப்பட்டுள்ளன.
- இந்தியக் கடற்படையானது, 'அர்னாலா' என்று பெயரிடப்பட்டுள்ள, குறைவான ஆழம் கொண்ட பகுதிகளில் இயங்கும் அதன் முதல் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல்களைப் (ASW SWC) பெற்றுள்ளது.
- நவீனத் தொழில்நுட்பம் மற்றும் புதிய விதை வகைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக என மத்திய அரசானது, 'விக்சித் கிருஷி சங்கல்ப் அபியான்' என்ற நாடு தழுவிய பிரச்சாரத்தினைத் தொடங்க உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கடைகள் திறந்திருக்கும் நேர நீட்டிப்பு

- தமிழ்நாடு அரசானது, அனைத்துக் கடைகளும் நிறுவனங்களும் ஆண்டின் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் திறந்திருக்க அனுமதித்துள்ளது.

- இந்த விதியானது, சமீபத்தில் 2025 ஆம் ஆண்டு ஜூன் 05 ஆம் தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- மாநில அரசானது, 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (ஸ்தாபனங்கள்) சட்டத்தில் திருத்தம் செய்து இது தொடர்பாக அதற்குத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.
- இது சுமார் 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள கடைகள் மற்றும் நிறுவனங்களுக்கு 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் ஸ்தாபனங்கள் சட்டத்தின் சில பிரிவுகளிலிருந்து விலக்கு அளித்துள்ளது.




## தேசியச் செய்திகள்

### ரோஹிங்கியாக்கள் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு





- சட்டவிரோதமாக குடியேறிய ரோஹிங்கியா முஸ்லிம்களை டெல்லியில் இருந்து நாடு கடத்துவதைத் தடுக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.
- இந்த ரோஹிங்கியாக்கள் வெளிநாட்டினர் என்பதால், அவர்கள் மீது வெளிநாட்டினர் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப் படலாம்.
- முகமது சலிமுல்லா & மற்றவர்கள் மற்றும் இந்திய ஒன்றியம் & மற்றவர்கள் (2021) வழக்கின் போது, 14 மற்றும் 21 ஆகிய சரத்தின் கீழ் உள்ள உரிமைகள் அனைத்து

நபர்களுக்கும் (குடிமக்கள் அல்லாதவர்கள் உட்பட) கிடைக்கப் பெறுகின்றன என்பதை உச்ச நீதிமன்றம் எடுத்துரைத்தது.

- ஆனால் நாடு கடத்தப்படாமல் இருப்பதற்கான உரிமையானது, 19(1)(e)வது சரத்தின் கீழ் உள்ள, வசிப்பதற்கான அல்லது குடியேறுவதற்கான உரிமையின் துணைப் பிரிவு அல்லது அதனுடன் தொடர்புடையது ஆகும்.
- 1951 ஆம் ஆண்டு அகதிகள் உடன்படிக்கை மற்றும் அதன் மீதான 1967 ஆம் ஆண்டு நெறிமுறையில் இந்தியா கையெழுத்திட்டதில்லை.
- மேலும், 'அகதிகள்' குறித்த விவகாரங்களை கையாளுவதற்காக இந்தியாவிடம் தனிச் சட்டமும் இல்லை.
- எனவே, அகதி 'நிலைக்கான' நீதிமன்ற வழக்குகள் ஆனது, இருதரப்புக் கொள்கையின் அடிப்படையில் ஒவ்வொரு வழக்குக்கும் தனித்தனியே பரிசீலிக்கப்படுகின்றன.
- அகதிகள் 'அயல் நாட்டவர்' மற்றும் 'வெளிநாட்டினர்' என்ற ஒரு வரையறையின் கீழ் வருகிறார்கள்.
- 1920 ஆம் ஆண்டு கடவுச் சீட்டு (இந்தியாவிற்குள் நுழைதல்) சட்டத்தின் படி, கடவுச்சீட்டு மற்றும் நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் இந்தியாவிற்குள் நுழையும் எந்தவொரு வெளிநாட்டினரையும் இந்தியாவிலிருந்து வெளியேற்ற மத்திய அரசு உத்தரவிடலாம்.
- அரசியலமைப்பின் 258(1) மற்றும் 239(1) ஆகிய சரத்துகளின் படி, இந்திய மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களுக்கும் இந்த அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

## இந்தியாவில் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் சரிவு 2017/21




- இந்தியாவின் பிறப்பின் போது எதிர்பார்க்கப் படும் ஆயுட்காலம் ஆனது ஓராண்டில் 0.2 ஆண்டுகள் சரிவு பதிவாகியதுடன், 50 ஆண்டுகளில் முதல்முறையாகக் குறைந்து உள்ளது.
- 2016-2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2017 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலமானது 69.8 ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், அதே காலக் கட்டத்தில் எதிர்பார்க்கப் படும் ஆயுட்காலம் முறையே 0.1 ஆண்டுகள் மற்றும் 0.3 ஆண்டுகள் குறைந்துள்ளது.
- பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் ஆனது டெல்லியில் ஆண்களுக்கு 73 ஆண்டுகளாகவும், கேரளாவில் பெண்களுக்கு 77.9 ஆண்டுகளாகவும் என அதிகமாகப் பதிவாகியுள்ளது.

- மிகக் குறைந்த எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் ஆனது சத்தீஸ்கரில் ஆண்களுக்கு 62.8 ஆண்டுகளாகவும், பெண்களுக்கு 66.4 ஆண்டுகளாகவும் பதிவாகியுள்ளது.

## கோவிட்-19 பெருந்தொற்று காலங்களின் போது இந்தியாவில் பதிவான உயிர் இழப்புகள்

- 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2021 ஆம் ஆண்டில் சுமார் 21 லட்சம் உயிரி இழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பிறப்பு மற்றும் உயிரிழப்புகளின் பதிவுகள் காட்டுகின்றன.
- இந்த எண்ணிக்கையானது, 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் கோவிட்-19 தொற்று காரணமாக ஏற்பட்ட 3.32 லட்சம் என்ற அதிகாரப்பூர்வ உயிரிழப்பு எண்ணிக்கையை விட ஆறு மடங்கு அதிகமாகும்.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கோவிட்-19 தளத்தின் முகப்பு பக்கத்தில் அதிகாரப்பூர்வ மொத்தப் பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கை 5.33 லட்சமாக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட உலக சுகாதார அமைப்பின் ஒரு அறிக்கையானது, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் பதிவான "அதிகப்படியான" உயிர் இழப்புகளின் எண்ணிக்கையை சுமார் 47 லட்சமாகக் குறிப்பிடுகிறது.
- அந்த இரண்டு ஆண்டுகளுக்கு இந்தியாவில் 4.8 லட்சமாகப் பதிவான அதிகாரப்பூர்வ உயிரிழப்பு எண்ணிக்கையை விட இது கிட்டத்தட்ட 10 மடங்கு அதிகமாகும்.
- அந்த ஆண்டு நாட்டில் 1.02 கோடிக்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- இது முந்தைய ஆண்டில் (2020) பதிவு செய்யப்பட்ட 81.15 லட்சம் உயிரிழப்புகளை விட 21 லட்சம் அதிகமாகும்.

| Year | Estimated deaths | Registered | Registration rate |
|---|---|---|---|
| 2015 | 81,84,202 | 62,67,685 | 76.58% |
| 2016 | 81,53,510 | 63,49,259 | 77.87% |
| 2017 | 81,17,689 | 64,63,779 | 79.63% |
| 2018 | 82,12,576 | 69,50,607 | 84.63% |
| 2019 | 83,01,769 | 76,41,076 | 92.04% |
| 2020 | Not Released | 81,15,882 | — |
| 2021 | Not Released | 1,02,24,506 | — |


# சர்வதேசச் செய்திகள்

## ஐக்கியப் பேரரசினால் முன்மொழியப்பட்ட கார்பன் எல்லை வரி

- ஐக்கியப் பேரரசு நாட்டு அரசாங்கமானது, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அதன் கார்பன் எல்லை இணக்க முறைமையினை (CBAM) 2027 ஆம் ஆண்டு முதல் செயல் படுத்துவதற்கு முடிவு செய்துள்ளது.
- இரும்பு மற்றும் எஃகு, அலுமினியம், உரம் மற்றும் சிமெண்ட் போன்ற பொருட்களுக்கு 2027 ஆம் ஆண்டு முதல் கார்பன் வரி விதிக்கப்படும்.
- இந்த முடிவின் காரணமாக ஐக்கியப் பேரரசிற்கு மேற்கொள்ளப்படும் 775 மில்லியன்


அமெரிக்க டாலர் மதிப்பிலான இந்தியாவின் ஏற்றுமதி பாதிக்கப்படலாம்.

- சமீபத்திய இந்தியா-ஐக்கியப் பேரரசு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் பிரிட்டனின் முன்மொழியப்பட்ட கார்பன் வரியை எதிர்ப்பதற்கு எந்தவித விதிமுறையும் இல்லை.
- தற்போதைய நிச்சயமற்ற தன்மை மற்றும் நடைமுறையில் இது குறித்த எந்த சட்டமும் இல்லாததால், எதிர்காலத்தில் சலுகைகளுக்கான நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது மறு சமநிலைப்படுத்தும் ஒரு உரிமையை இந்தியா தக்க வைத்துக் கொள்ளும் என்ற புரிதல் உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நீரிழிவு நோயின் புதிய வகை





- முதல் முறையாக, ஆராய்ச்சியாளர்கள் நீரிழிவு நோயின் ஒரு புதிய துணை வகையை அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது, இளமைப் பருவத்தின் ஒரு தொடக்க நிலையின் போது ஏற்படும் நீரிழிவு நோய் (MODY) எனப்படும் அரிய வகை நீரிழிவு நோயை மையமாகக் கொண்டுள்ளது.
- இது பொதுவாக குழந்தைப் பருவத்திலோ அல்லது இளமைப் பருவத்திலோ தோன்றும்.
- இன்சுலின் உற்பத்தி செய்யும் கணைய பீட்டா செல்களின் சரியான செயல்பாட்டிற்கு முக்கியமான ABCC8 எனும் ஒரு குறிப்பிட்ட மரபணுவானது MODY துணை வகையை

எவ்வாறு ஏற்படுத்துகிறது என்பதை இந்தக் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன.

- MODY என்பது கணைய இன்சுலின் உற்பத்தியைப் பெருமளவு பாதிக்கும் ஒற்றை மரபணு மாற்றங்களால் ஏற்படும் ஓர் அசாதாரண, பரம்பரை /மரபணு வழி நீரிழிவு நோய்ப் பாதிப்பு வடிவமாகும்.
- இன்றுவரையில், 13 MODY துணை வகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- மரபணுக் குறைபாடுகளால் ஏற்படும் இந்தக் கோளாறுகளைத் தடுப்பதற்கு தற்போது எந்த வழியும் இல்லை.

## காஸ்மோஸ் 482





- காஸ்மோஸ்/Kosmos 482 என்பது கோள்களின் ஆய்வுக்கு, குறிப்பாக வெள்ளிக் கோளின் ஆய்விற்காக அர்ப்பணிக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் வெனெரா திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இது 1972 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்டது.
- ஆனால் ஏவுகலச் செயலிழப்புகள் காரணமாக, அன்றிலிருந்து அது புவியின் சுற்றுப் பாதையை விட்டு வெளியேறாமல், ஈர்ப்பு விசையின் காரணமாக புவியைச் சுற்றி வருகிறது.
- 1 மீட்டர் அகலமுள்ள இந்த விண்கலம் ஆனது சுமார் 500 கிலோகிராம் எடை கொண்டது மற்றும் டைட்டானியத்தால் கட்டமைக்கப்பட்டது.
- மத்திய அந்தமான் தீவின் மேற்குப் பகுதியில் உள்ள இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அதன் கட்டுப்பாடற்ற மறு நுழைவு நிகழ்ந்தது.

## HAROP ஆளில்லா விமானங்கள்

- பாகிஸ்தான் மேற்கொண்ட ஆளில்லா விமானங்களின் தாக்குதலுக்குப் பதிலளிக்கும் விதமாக, இந்திய இராணுவமானது சமீபத்திய இஸ்ரேலிய HAROP ஆளில்லா

விமானங்களுடன் பாகிஸ்தானின் பல வான்வழிப் பாதுகாப்பு அமைப்புகளையும் குறி வைத்துத் தாக்கியது.

- HAROP ஆளில்லா விமானங்கள் ஆனது, ஒரு வகை வான்வழிப் போர் விமானமாகும்.
- அவை சுமந்து செல்லும் வெடி பொருளுடன், அதன் இலக்குகளைத் தாக்குவதன் மூலம் அழிவை ஏற்படுத்துகின்றன.
- இதனால், அவை "தற்கொலை தாக்குதலில் ஈடுபடும் ஆளில்லா விமானங்கள்" மற்றும் "காமிகேஸ் ஆளில்லா விமானங்கள்" என்ற பெயர்களைப் பெற்றன.
- அவை UAV (ஆளில்லா வான்வழி வாகனம்) மற்றும் ஒரு எறிகணையின் பண்புகளை ஒருங்கிணைந்துக் கொண்டுள்ளன.
- போர்க்களத்திற்கு வெளியே உள்ள ஒரு தளத்தில் இருந்து ஏவப்படுகின்ற இந்த HAROP ஆளில்லா விமானங்கள் 200 கிலோ மீட்டர் வரை பறக்கும் திறன் கொண்டது.
- இலக்கினைக் குறி வைத்துத் தாக்கும் ஆயுத அமைப்புகளாக, அவை எதிரி நாட்டின் பகுதிகளுக்கு மேலே பறந்து, அதன் இலக்கிற்கு என்று காத்திருந்து, பின்னர் அதனைத் தாக்குகின்றன.
- அவை ஆளில்லா கடற்பரப்பு வாகனங்கள், கட்டுப்பாட்டு அமைப்புகள், விநியோக கிடங்குகள், பீரங்கிகள் மற்றும் வான் வழிப் பாதுகாப்பு அமைப்புகள் போன்ற உயர் மதிப்புள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கக் கூடியது.




# மாநிலச் செய்திகள்

## ஜெனு குருபா பழங்குடியினர்

- கர்நாடகாவின் நகர்ஹோலே புலிகள் வளங்காப்பகத்தில் வனவிலங்குப் பாதுகாப்பு மற்றும் புலிகள் வளங்காப்பை அதிகரிக்கும் முயற்சியில் 40 ஆண்டுகளுக்கு முன்பு ஜெனு குருபா சமூகத்தினர் வெளியேற்றப் பட்டனர்.

❖ சமீபத்தில் அவர்கள் தங்களின் பூர்வீகப் பகுதிக்குத் திரும்பியுள்ளனர்.

❖ இந்தியாவில் பழங்குடியின மக்கள் இந்த வழியில் தங்கள் முக்கிய உரிமைகளை நிலை நாட்டியது இதுவே முதல் முறையாகும்.

❖ இது 2006 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் மற்றும் பிற மரபார்ந்த வன வாசிகள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டத்தின் விதிகளால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

❖ நாகர்ஹோலேவில் இருந்து சுமார் 20,000 என்ற அளவில் ஜெனு குருபா மக்கள் சட்ட விரோதமாக வெளியேற்றப் பட்டுள்ளனர்.

❖ 6,000 பேர் இதனை எதிர்த்து அந்தப் பூங்கா பகுதியிலேயே தங்கினர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★